

# இயேசுவுடன் பயணம்

# குடும்பமாக...

**கிருபாவளன்**

# வாயிலில் நான்
# வழி காட்ட..

*குடும்பமாய் குதூகலித்திருக்கிறோம். குடும்பமாய் குழம்பியிருக்கிறோம் குடும்பமாய் குமுறியிருக்கிறோம். குடும்பமாய் மகிழ்ந்திருக்கிறோம். குடும்பமாய் திரைப்படம் பார்த்திருக்கிறோம். குடும்பமாய் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன் நம்மையே தொலைத்திருக்கிறோம். குடும்பமாய் சிற்றுலாவும் சுற்றுலாவும் சென்றிருக்கிறோம். குடும்பமாய் சுபநிகழ்ச்சிகளிலும் துக்க நிகழ்வுகளிலும் பங்கு கொண்டிருக்கிறோம். இப்படி குடும்பசகிதமாகவே அனைத்தையும் செய்து பழக்கப்பட்ட நாம் ஒரு குடும்பமாக இயேசுவை பின் தொடர்ந்திருக்கிறோமா? குடும்பம் இறைவன் ஏற்படுத்திய அமைப்பு. அந்த இறைவனே உலகுக்கு நுழைய திட்டமிட்ட போது தேர்ந்தெடுத்தது குடும்பம் என்ற அமைப்பைத்தான். இறுதியில் தன் சிலுவைப் பாடுகளை ஏற்க துணிவு கொண்டவராய் **"வாருங்கள் யெருசலேமுக்குப் போவோம்"** என்று சீடரை அழைத்துக் கொண்டு போனபோதும், இயேசு சந்தித்தது ஒரு குடும்பத்தைத்தான். பரபரப்பான மார்த்தா, பாதத்தில் அமரும் மரியா, பாசத்துக்குரிய லாசர் ஆகியோரின் குடும்பத்தில் ஒரு உறுப்பினராகவே இருந்துவிட்ட இயேசு அவர்கள் துக்கத்தில் பங்கு கொண்டு லாசரை உயிர்ப்பித்து உயிர்ப்பும் உயிரும் நானே" என்று மெய்ப்பித்து பயணம் புறப்படுகிறார். மார்த்தா மரியா - குடும்பத்தில் இயேசுவுக்குக் கிடைத்த இடம் நம் குடும்பத்தில் உண்டா?*

***இதோ இந்தச் சிலுவைப்பாதையில் தந்தையாய், தாயாய், பிள்ளையாய் ஒரு குடும்பமாய் இயேசுவைப் பின் தொடர்வோம்.***

# தவறான முடிவுகள் தடம்புரள வைக்கின்றன

*"ஆண்டவருக்கு உகந்ததை ஆராய்ந்து பாருங்கள்" (எபே5:10)*

*முதல் நிலை :*

*இயேசு சாவுக்கு தீர்வையிடப்படுகிறார். தெளிவும் துணிவும் இல்லாத பிலாத்துவின் மனநிலை, அச்சத்தைக் கிளப்பிவிட்டு ஒதுங்கிப்போகும் அவரது மனைவியின் மனப்பாங்கு , யூதர்களின் மூர்க்கத்தனமான பிடிவாதம் இவை மூன்றும் தான் இந்த தவறான முடிவுக்குக் காரணம், நம் குடும்ப வாழ்விலும் இவை பிரதிபலிப்பதைக் காண முடியும். இயேசு குற்றமற்றவர் என்று பிலாத்தின் உள்ளுணர்வு - சொன்னாலும் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவனைத் தவறான முடிவெடுக்கத் தூண்டிற்று. அனுபவமும் அறிவும் சிலவற்றைச் சரியென்றும் தவறென்றும் பகுத்து உணர்த்தினாலும் சில நிர்ப்பந்தங்களுக்குப் பயந்து நாம் சரியென நினைப்பதை செய்யாத நிலையில் குடும்பத் தலைவர்கள் இருந்துவிடுகிறோம். குறிப்பாக நம் பிள்ளைகளின் வாழ்க்கை பிரச்சனைகளில் மனது சரியென்று சொல்வதை விடுத்து சமுதாய நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து விடுகிறோம். விளைவு தவறான முடிவு, விபரீத விளைவு.*

*"இயேசு குற்றமற்றவர்தான். தாங்கள் நினைப்பது சரிதான். துணிந்து நில்லுங்கள். நான் துணையாய் இருக்கிறேன்" என்று சொல்லுதற்குப் பதிலாய் "கை கழுவிவிடுங்கள். வேண்டாம் இந்த வம்பு" என்று பிலாத்தின் மனைவி சொன்னதால் பிலாத்து மேலும் குழம்பிவிடுகிறான். குடும்பத் தலைவர்கள் முடிவு எடுப்பதில் சற்று தடுமாறும் போது துணையாயிருந்து தெளிவு தருவதற்குப் பதிலாக மேலும் அச்சங்களைக் கிளப்பிவிடுகிற இல்லத்தலைவிகளாய் இருந்துவிடுகிறோம். நம் தவறான அணுகுமுறை குடும்பத் தலைவர்கள் தவறான முடிவெடுக்க துணை போகிறது.*

*விளைவுகள் பற்றி யோசிக்காமல் இந்த மனிதனது இரத்தப்பழி எங்கள் மீது விழட்டும் என்ற யூதர்களின் மூர்க்கத்தனமான பிடிவாதம் பிலாத்தை முற்றிலுமாக தவற வைத்துவிட்டது. பெற்றோர் தரப்பு வாதங்களை, அவர்களது நியாயமான ஐயங்களை, அக்கறையால் மேலிட்ட ஆலோசனைகளை காது கொடுத்துக் கூட கேட்காமல் தாங்கள் நினைத்தது நிகழ்ந்தே தீரவேண்டும் என மூர்க்கத்தனமாக பிடிவாதம் பிடிக்கும் குழந்தைகளாக இருந்து விடுகிறோம். இறுதியில் பாதிப்பு நமக்குத்தான் என்பதையும் மறந்துவிடுகிறோம்.*

*முடிவுகள் எடுப்பதில் எதேச்சதிகாரமும் கூடாது. நிர்ப்பந்தங்களுக்கு பணிதலும் கூடாது. பதுங்குதலும் கூடாது. பிடிவாதப்போக்கும் கூடாது. கூட்டாக சிந்தித்து குடும்பமாக ஆலோசித்தால் தவறான முடிவுகள் எடுப்பது தவிர்க்கப்படும்.*

***செபம் :*** *ஆண்டவரே! முடிவுகள் எடுக்கும் நேரங்களில் தைரியமின்மை, பிடிவாதம், நிர்ப்பந்தங்கள் இவை எம்மை பாதிக்க விடாமல் தெளிவாகச் சிந்திக்கவும் குடும்பமாகச் சேர்ந்து முடிவெடுக்கவும் உம் ஒளியை எம் மீது வீசும். ஆமென்.*

# பகிரப்படாத சுமைகள் பாரமாய் அமைகின்றன

*"ஒவ்வொருவரும் அவரவர் சுமையைத் தாங்கட்டும்" (கலா6: 5)*

*இரண்டாம் நிலை :*

*இயேசுவின் தோள்கள் மீது பாரமான சிலுவை சுமத்தப்படுகிறது. அவரவர் பாவங்களுக்கு அவரவர் பரிகாரம் செய்திருந்தால், அனைவருக்காவும் பரிகரிக்க வேண்டிய தேவை இயேசுக்கு ஏற்பட்டிருக்காது. பாரமான சிலுவையைச் சுமக்க வேண்டிய அவசியமும் இயேசுவுக்கு ஏற்பட்டிருக்காது. அனைவரின் சுமையும் அவர் மீது ஏற்றப்பட்டது. அனைவரின் பாரமும் அவர் மீது சுமத்தப்பட்டது. அவரவர் பாரத்தை அவரவர் சுமக்காத காரணத்தால் ஒருவர் மீது தாளமுடியா சுமையை ஏற்றும் அவலம் நம் குடும்பங்களிலும் நிகழத்தான் செய்கின்றது.*

*திட்டமிட்ட வாழ்க்கை நடத்தாமல் வரவுக்கு மீறிய செலவுகள் செய்து, அவசியங்களைத் தவிர்த்து ஆடம்பரத்தில் மோகம் கொண்டலைந்து இறுதியில் அல்லோலப்படும் குடும்பங்கள் எத்தனை எத்தனை? வாழ்நாளெல்லாம் சம்பாதித்தாலும் வாங்கிய கடனுக்கு வட்டியைக் கூட முழுமையாக செலுத்த முடியாமல் பெருத்த கடன் சுமைகளை தங்கள் வாரிசுகளுக்கு விட்டுச் செல்லும் குடும்பத்தலைவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள்.*

*போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என மனம் சொன்னாலும் அடுத்தவர்களின் ஆடம்பர வாழ்வையே முன்னுதாரணமாகக் கொண்டு, அவர்களைப் போன்ற நிலையை எப்படியேனும் அடைய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை குடும்பத்தலைவிகள் கணவர்களுக்கு ஏற்படுத்துவதால் சில குடும்பத்தலைவர்கள் லஞ்ச லாவண்யம் போன்ற தவறான வழிமுறைகளைப் பின்பற்றி அவப்பெயரையும் அதற்கான தண்டனையையும் பெற நேரிடுகிறது.*

*கடமைகளைச் சரிவரச் செய்து கருத்தாய் கல்வி கற்று தகுதியின் அடிப்படையில் உயர்கல்வியையோ வேலையையோ பிள்ளைகள் பெற முடியாத காரணத்தால் பரிதவிக்கும் பெற்றோர்களின் நிலை நாம் அறிந்தததுதானே! பெற்ற பிள்ளையாயிற்றே ! எப்படியாவது வாழ்க்கை அமைத்துத் தர வேண்டுமே!' என்று அங்கலாய்த்து அதற்காக பெரும் பணத்தை செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு பெற்றோர்களைத் தள்ளும் குழந்தைகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.*

*இப்படி அவரவர் பொறுப்பை அவரவர் சுமக்காத காரணத்தால் குடும்பத்தில் யார் மீதாவது தேவையற்ற சுமைகள் சுமத்தப்படுகிறது. குடும்பத்தில் உள்ளவர்கள் சுமைகளைப் பகுத்துக் கொள்ள வேண்டுமே தவிர பெருக்கக் கூடாது.*

***செபம் :** ஆண்டவரே! எங்களால் செய்ய முடிந்ததையும் நாங்கள் ய்ய வேண்டியதையும் செய்யாமல் எங்களில் யாருக்கோ நாங்களே பாரமாக அமைந்து விடுகிறோம். சுமைகளை அதிகரிக்காமல் சுமைகளைப் பகிர்ந்து கொள்ளும் மனதைத் தாரும். ஆமென்.*

# எல்லை மீறிய எதிர்பார்ப்புகள் தள்ளாட வைக்கின்றன

***முணுமுணுக்காமல் வாதாடாமல் யாவற்றையும் செய்யுங்கள்(பிலி 2:14)***

*மூன்றாம் நிலை:*

*இயேசு தன் சிலுவைப்பாதையின் போது முதன்முறையாக கீழே விழுகிறார். இயசுே◌வின் தோள்கள் மீது சுமத்தப்பட்ட சிலுவை அவரது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருந்திருக்க வேண்டும். உலகின் பாவங்களையெல்லாம் ஒட்டு மொத்தமாக ஒருவரின் தோள் மீது சுமத்தினால் அவர் கீழே விழத்தானே செய்வார். அளவுக்கு மீறிய பாரம் ஆண்டவரையே தள்ளாட வைத்தது. அன்றாட வாழ்க்கையில் நம் குடும்ப வாழ்க்கையையும் தள்ளாடச் செய்கிறது.*

*எல்லோரையும் ஒரே விதமாய் ஆண்டவன் படைப்பதில்லை சிலருக்கு அறிவு, சிலருக்கு ஆற்றல், சிலருக்கு உடல் பலம், சிலருக்கு மனோதிடம் என ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் ஆண்டவன் ஆசிர்வதித்துள்ளார். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல் கணவரிடமோ அல்லது மனைவியிடமோ இருக்கும் நல்லவற்றைப் பார்க்காமல் இல்லாதவற்றிற்காகவே ஏங்கி ஒருவரை ஒருவர் வசைபாடி வருத்தத்தில் தள்ளாட வைக்கும் குடும்பத்தலைவர்களும் தலைவியரும் உள்ளனர்.*

*மற்றத் துறைகளில் சிறந்தும் படிப்பில் சற்று மந்தமுமான குழந்தைகளை, அடித்து உதைத்து முதல் மதிப்பெண் பெற்றே தீர் வேண்டும், முதல் வகுப்பில் தான் தேர்ச்சி பெற வேண்டும் எனப் பெற்றோர்கள் வதைக்கும் போது குழந்தைகள் தாங்க முடியாமல் தள்ளாடி விழுகிறார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் தகுதிக்கு மீறிய சாதனையை, வெற்றியை எதிர்பார்க்கும் போது குழந்தைகளின் உடல் மட்டுமல்ல மனமும் நொந்துபோகிறது. அதை அடையும் பொருட்டு ! அவர்களை வருத்துவது, அடையாவிட்டால் தண்டிப்பது இவையெல்லாம் அவர்கள் மீது அளவுக்கு அதிகமான பாரத்தைச் சுமத்தி கீழே தள்ளுவது போன்றதுதான்.*

*சிலநேரம் குழந்தைகளும் பெற்றோரின் வசதிக்கு அப்பாற்பட்ட பொருட்களுக்காக, செலவுகளுக்காக முரண்டு பிடிப்பதும் உண்டு எல்லோரும் வசதியாய் பிறப்பதில்லை. வசதி படைத்த சிலரைப் பார்த்து அவர்களைப் போல தாங்களும் நடத்தப்படவேண்டும் என பிள்ளைகள் ஆசைப்படலாம். ஆனால் அதற்கான சூழல் பெற்றோருக்கு இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையேல் வருத்தமும் கோபமுமே மிஞ்சும்.*

*அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தில் முடியலாம். – ஏமாற்றங்கள் எரிச்சலாகி எரிமலையாய் வெடிக்கலாம். தடுமாற்றங்களுக்கு தகுதி மீறிய ஆசைகளே காரணம்.*

***செபம்:*** *ஆண்டவரே! தகுதிக்கு மீறிய எதிர்பார்ப்புகள் சக்திக்கு அப்பாற்பட்ட ஆசைகள் இவற்றைத் தவிர்த்து அவரவர் ஆற்றலை மதித்து பயன்படுத்தும் நல்ல உள்ளத்தைத் தாரும். ஆமென்.*

# சஞ்சலத்தால் சந்திப்புகளில் சந்தோஷம் தொலைகிறது

*"எல்லாவகை தீமைகளையும் விட்டு விலகுங்கள்" (1 தெச 5:22)*

*நான்காம் நிலை :*

*நிகழக்கூடாத விதத்தில், நிகழக்கூடாத இடத்தில், நிகழக்கூடாத நேரத்தில் இந்தச் சந்திப்பு நிகழ்கிறது. 'இந்த மகராசனைப் பெற்ற தாய் இவர்தான் எனவும் 'இந்த மகராசி பெற்ற தவப்புதல்வன் இவர்தான் எனவும் போற்றப்படவேண்டிய மரியாளும் இயேசுவும் சந்திக்கும் சூழல் சகிக்க முடியாத ஒன்று. ஆனால் இந்தத் துயருக்குக் காரணம் அன்னை மரியாளோ, மகன் இயேசுவோ அல்ல. இறைவனின் சித்தம். ஆனால் நம் குடும்ப வாழ்வில் நிகழும் துயர சந்திப்புகளுக்கு நாம்தானே காரணம்.*

*ஆசையோடு காண வந்த தந்தையை, ஒரு மகன், மதுக்கடையில் குடிபோதையில் காண நேரிடுகிறது. பாசத்தோடும், அன்பொழுகவும் நிகழவேண்டிய சந்திப்புகள் சலிப்புகளுடனும், கசப்புகளுடனும், சந்தேகங்களுடனும் நிகழ, குடும்பத் தலைவர்கள் சில நேரங்களில் காரணமாகிவிடுகிறோம்.*

*பள்ளியிலிருந்து களைத்துப்போய் வீடு திரும்பும் மகனோ, மகளோ , சிற்றுண்டி தயார் செய்து வைத்து, காத்திருக்கும் அன்னையைச் சந்திக்க ஓடோடி வருவார்கள். வீட்டைப் பூட்டி விட்டு ஊராரோடு கதை பேசிக் கொண்டிருப்பதையோ அல்லது சாவியை அடுத்த வீட்டில் கொடுத்துவிட்டு லேடிஸ் கிளப்புக்கு அம்மா போயிருப்பதையோ அறியும் போது பிஞ்சு மனங்கள் எவ்வளவு வேதனைப்படும்? அலுவலகத்திலிருந்து அலுத்துப்போய் வீடு திரும்பும் கணவன் காணவிரும்புவது காத்திருக்கும் மனைவியை. ஆனால் அவன் காண்பதோ தொலைக்காட்சித் தொடரில் மூழ்கி தன்னை சட்டையே பண்ணாத மனைவியை. சந்திப்புகளில் சஞ்சலம் ஏற்பட குடும்பத் தலைவியருக்கும் பொறுப்புண்டு.*

*சான்றோன் எனக் கேள்விப்பட்டு மகிழவேண்டிய பெற்றோர், பிறர் மூலமாக உங்கள் மகன் புகை பிடிப்பதை, மது அருந்துவதை பார்த்தோமே' என்றோ அல்லது உங்கள் பிள்ளை யாரோடோ சுற்றுவதைப் பார்த்தோமே, பார்த்து வளர்க்கக்கூடாதா?' எனவோ கேள்விப்பட நேரிட்டால் பெற்றோர் இதயம் என்ன பாடுபடும்! அதையே அவர்கள் நேரில் பார்க்க நேரிட்டால் அவர்கள் உள்ளம் உடைந்து போகுமே! இப்படி சந்திப்புகள் கசந்துபோக பிள்ளைகளும் காரணமாவதுண்டு.*

*தாய், தந்தை, பிள்ளை என்ற நிலையை எந்நேரமும் நினைவில் கொண்டு உடல் பிரிந்திருந்தாலும் உணர்வால் இணைந்திருந்தால் சந்திப்புகள் சந்தோஷமாக அமையும். இல்லையேல் சஞ்சலம்தான் மிஞ்சும்.*

***செபம் :*** *ஆண்டவரே! எங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எங்களைப் பார்க்க நேரிடும் போதும், எங்களைப் பற்றி கேள்விப்படும் போதும் பெருமை கொள்கிற விதத்தில் எங்கள் வாழ்க்கை அமையட்டும் ஆமென்.*

--

# பணிகளில் பங்குகொள்ளாவிடில் பலன்கள் கசக்கும்

*"ஒருவருக்கொருவர் நன்மை செய்து பரிவு காட்டுங்கள்"(எபே 4:32)*

*ஐந்தாம் நிலை :*

*இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் உதவுகிறார். யாருடைய சிலுவையையோ தேவையில்லாமல் சுமக்க வேண்டியுள்ளது போல வேண்டாவெறுப்புடனும் முனகலுடனும் சீமோன் சிலுவை சுமக்க உதவுகிறார். இயேசு சிலுவை சுமப்பது அவருக்காகவும் தான். அவரது சிலுவையில் அவருக்கும் பங்குண்டு என்பதை அவர் உணர்ந்ததாகவே தெரியவில்லை. இத்தகைய நிலை நம் வீடுகளிலேயும் ஏற்படத்தான் செய்கின்றது.*

*அரக்கப் பரக்க சமையலை ஒருபக்கமும், இதர வேலைகளை மறுபக்கமும் பார்த்துக்கொண்டிருக்கும் மனைவிக்கு உதவி செய்வது கௌரவ குறைச்சல் போலவும், தேவையற்றது போலவும், பல குடும்பத் தலைவர்கள் இன்றும் நினைக்கத்தான் செய்கிறார்கள். அந்த மனைவி வேலை செய்வதே நமக்காகத்தான். அவளது சமையலைத் தான் நாம் உண்கிறோம். அவள் செய்யும் அனைத்துப் பணிகளும் நம்மையும் உள்ளடக்கிய குடும்பத்துக்காகத்தான் என்பதை பலசமயம் மறந்துவிடுகிறோம்.*

*நாள் முழுவதும் பள்ளியிலோ, அலுவலகத்திலோ பணியாற்றிவிட்டு, வீட்டுக்கு வரும்போது எஞ்சிய வேலைகளையும், கோப்புக்களையும் கட்டுக்கட்டாய் சுமந்து வந்து, இரவு கண்விழித்து வேலை செய்யும் கணவருக்கு, உதவியாகவோ அல்லது ஆறுதலாகவோ இருப்பது, தேவையே இல்லாதது போல தங்கள் விருப்பம் போல உல்லாசமாய் இருக்கும் குடும்பத் தலைவியரும் உண்டு. அந்தக் கணவர் சிந்தும் வியர்வைதான் நம் வீட்டில் உலை வைத்து உணவு படைக்க ஆதாரமாய் உள்ளது என்பதை மறந்து போகிறோம்.*

*பல அலுவல்களில் பரபரப்பாய் இருக்கும் பெற்றோர்கள் கடைக்குச் செல்லுதல், அண்டை வீட்டுக்குச் செல்லுதல் போன்ற சிறிய வேலைகளைச் செய்யச் சொல்லும் போது, சிறுவர் சிறுமியர் எரிச்சல் அடைவதும் மனதிற்குள்ளேயே முனகிக் கொள்வதும், சில நேரங்களில் சத்தமாகவே எதிர்ப்பை தெரிவிப்பதும் உண்டு. பெற்றோருக்கு ஒத்தாசை புரிவது ஏதோ ஒரு பெரிய இடைஞ்சல் போலக் கருதுவதுண்டு. பெற்றோர் படும் பாடும், செய்யும் வேலைகள் யாவும் தங்களுக்கும் சேர்த்துத்தான் என்பதை எப்படி மறக்க முடிகிறது?*

*குடும்பத்தில் எந்த வேலையும் பிரத்தியேகமாக அவரது அல்லது இவரது வேலை என்று கிடையாது. வசதிக்காக வேலைகளை ஆணுடையது, பெண்ணுடையது எனப் பிரித்துள்ளோம். இதில் ஒருவருக்கொருவர் உதவுவதுதானே இயற்கையானதும் நியாயமானதும். இதைச் செய்ய என்ன தயக்கம்?*

***செபம் :*** *ஆண்டவரே! குடும்பத்தில் ஒவ்வொருவர் செய்யும் வேலையும் அனைவருக்கும் பலன் தருகிறது. அதுபோல அந்த வேலையிலும் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்து உதவி செய்யும் உள்ளம் தாரும். ஆமென்.*

# நெருக்கம் தவிர்க்கப்பட்டால் நெருடல் மிஞ்சும்

*"மற்றவருக்கு வளர்ச்சி தருபவற்றைச் செய்வோமாக" (உரோ 14: 19)*

*ஆறாம் நிலை :*

*வெரோணிக்கம்மாள் இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறார்.. சிலுவைப் பாதையின் போது இயேசுவை பலர் பார்த்தனர். சிலர் பரிகாசமாய் - பார்த்தனர். சிலர் பரிதாபத்தோடு பார்த்தனர். சிலர் கண்டுகொள்ளவே இல்லை. ஆனால் பாசத்தோடும் பரிவோடும் பார்த்து, நெருங்கி வந்து உதவிய ஒரு சிலரில் வெரோணிக்காள் ஒருவர். பாசமும் பரிவும் அதிகம் தேவைப்படும் நேரங்களில் நம் குடும்பத்தினரை நாமும் பார்க்கத் தவறிவிடுகிறோம். சற்று நெருங்கி நேரம் செலவிட மறந்துவிடுகிறோம்.*

*ஓடாய்த் தேயும் அளவுக்கு உழைத்து பணத்தைச் சம்பாதித்து வீட்டிற்கு கொடுக்கும் குடும்பத் தலைவர்கள் மனைவியோடு, மக்களோடு சிறிது நேரம் செலவிட தவறுவதுண்டு. "எங்கே நேரம் இருக்கிறது? எனக்கும் ஆசைதான். எங்கே முடிகிறது? யாருக்காக இந்த ஓட்டமும் அலைச்சலும்?" என ஆயிரம் சாக்குகளை கூறினாலும் அவையெல்லாம் காரணங்கள் ஆகாது. பரிவும், பாசமும் மனைவிக்கு தேவைப்படும் போது, அக்கறையும் ஆலோசனையும் பிள்ளைகளுக்குத் தேவைப்படும்போது பணம் அதைத் தரமுடியாது. நமது நெருக்கம்தான் அதைத்தரமுடியும்.*

*வீட்டு வேலைகளில் மும்மரமாய் இருக்கும் குடும்பத்தலைவிகள் வீட்டு அங்கத்தினர்களுடன் அன்பாய் உறவாட தவறுவதும் உண்டு. வீடு செங்கற்களால் ஆனது. குடும்பம் மனிதர்களால் ஆனது. கற்களால் ஆன வீட்டுக்கு நேரம் செலவிட முடிகிற குடும்பத் தலைவிகளுக்கு கணவன், குழந்தைகள், உறவினர்கள் அடங்கிய குடும்பத்திற்கு நேரம் செலவிட முடியாதா? பள்ளியில் சேர்த்தல், ஆடைகள் வாங்குதல், பொருட்களை வாங்கிக் கொடுத்தல் எனப் பல காரியங்களைப் பார்த்துப் பார்த்து செய்யும் பெற்றோர்கள் பிள்ளைகளோடு அமர்ந்து தினமும் சிறிது நேரம் செலவிட மறுக்கிறார்கள். புரியாத பாடத்தைப் படிக்கமுடியாமல் திணறும்போது உடனிருந்தால் எவ்வளவு நலமாய் இருக்கும். நமது நெருக்கம் தராத இன்பத்தை நாம் தரும் எந்தப் பொருளும் தராது.*

*தங்களுக்காகவே வாழும் பெற்றோருடன் நேரம் செலவிட முடியாத, அவர்களைக் கண்டுகொள்ளாத இளைஞர் இளம்பெண்களும் உண்டு. நண்பர்களோடு சுற்றுவதற்கும், பள்ளி, கல்லூரி காரியங்களுக்கும் செலவிட நேரம் இருக்கிற இவர்களுக்கு பெற்றோரை பிட்டு அகன்றிருப்பதே வசதியாய்ப்படுகிறது. பிள்ளைகளோடு திருப்பதுதானே பெற்றோருக்கு மகிழ்ச்சி தரமுடியும்.*

*குடும்பத்தில் ஒருவரை ஒருவர் பாசத்தோடும், பரிவோடும் பார்த்து, நெருங்கி, நேரம் செலவழிக்கும் போது கிடைக்கும் ஆத்ம திருப்தி பணத்தாலோ, பொருட்களாலோ, வேறு எதனாலோ கிடைக்காது.*

***செபம் :** ஆண்டவரே! எங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை பாசத்தோடு பார்க்கவும், அவர்களுக்கு ஆதரவு தேவைப்படும் போது அருகிருந்து நேசிக்கவும், நேரம் ஒதுக்கவும் அருள்தாரும். ஆமென்.*

# உதாசீனம் செய்வதால் உறவுகள் உடையும்

*"மனத் தாழ்மையோடு மற்றவர்களை உயர்வாகக் கருதுங்கள்' (பிலி 2: 3)*

*ஏழாம் நிலை :*

*-இயேசு இரண்டாம் முறையாக கீழே விழுகிறார். கீழே விழுந்த அவரைத் தூக்கிவிடுவதற்குப் பதிலாக தூற்றினார்கள். கைகொடுத்து தாங்குவதற்குப் பதிலாக கசையால் அடித்தார்கள். அவருக்கு தேவைப்பட்டது உதவி, உற்சாகம். கிடைத்ததோ உதையும் உதாசீனமும். இப்படிப்பட்ட நிலை நம் இல்லங்களிலும் நிகழத்தான் செய்கின்றது.*

*அதிகம் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்காமல் மனம் சோர்ந்து, வீடு திரும்பும் கணவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக 'எனக்கு அப்பவே தெரியும். உங்களுக்கு சாமர்த்தியம் பத்தாது. உங்களைவிட வயதில் குறைந்தவர்களெல்லாம் எப்போதோ, பதவி உயர்வு பெற்றுவிட்டார்கள். எல்லாம் என் தலைவிதி' என மனைவி புலம்பித் தீர்க்கும் போது, அது வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போலத்தான் இருக்கும்.*

*அதுபோலவே மனைவி முன்னோசனையின்றி செய்த செயலினால், பண நஷ்டமோ வேறு கஷ்டமோ நேரிடும் போது 'பரவாயில்லை போகட்டும்' என்று சொல்வதற்குப் பதிலாக "ஒரு காரியத்தையும் உருப்படியாகச் செய்யத் தெரியாது. இப்ப வருத்தப்பட்டு என்ன பண்றது? எல்லாம் என் தலையில் ஒன்ன கட்டி வச்சாங்களே அவங்களைச் சொல்லணும்" என கணவன் அலுத்துக்கொள்ளும் போது மனைவியின் உள்ளம் சுக்குநூறாகச் சிதறிவிடும்.*

*எவ்வளவோ முயற்சி செய்தும் முதல் இடத்தையோ அல்லது, விரும்பிய மதிப்பெண்ணையோ பெற முடியாமல் பிள்ளைகள் தவிக்கிறபோது 'இது ஒன்னத்துக்கும் உதவாது. இதுக்கு செலவழிக்கிற பணம் மொத்தமும் வீண். படிக்கிற பிள்ளையை பார்த்தாலே தெரியாது?" - என பெற்றோர் உறுமுகிறபோது ஏற்கனவே காயப்பட்ட அந்த இள - உள்ளம் இரணமாகிவிடும்.*

*வசதிக் குறைவால் தங்கள் பிள்ளைகளுக்கு தாங்கள் விரும்பும் காரியங்களைச் செய்ய முடியாத பெற்றோர் தங்கள் இயலாமையைக் குறித்து ஏற்கனவே நொந்து போயிருக்கும்போது பிள்ளைகள் அவர்களை - இழித்துரைப்பதும், நண்பர்களின் பெற்றோரோடு ஒப்பிட்டு குறை - கூறுவதும் அவர்களை மேலும் நோகச் செய்யும். எல்லோருக்கும் எல்லாம் இருப்பதுமில்லை. எல்லோரும் எப்போதும் வெற்றி பெறுவதுமில்லை. தவறுவது மனித இயல்பு. அப்படித் தவறும்போதுதான் குடும்பத்தினரின் அரவணைப்பும், ஆதரவும் அதிகம் தேவை. உஷ்ணமான வார்த்தைகள் வருத்தத்தை அதிகரிக்கும். உற்சாகமான வார்த்தைகள் கவலையைக் கூட குறைத்துவிடும்.*

***செபம் :** ஆண்டவரே! தவறுவது மனித இயல்பு என்பதை புரிந்துகொண்டு, தடுமாறுகிறபோது ஒருவரை ஒருவர் தாங்கக் கூடிய நல்ல மனதைத் தந்தருளும். ஆமென்.*

# வியர்வை சிந்தாததால் கண்ணீர் சொரிகிறோம்

***“நன்மை செய்வதில் மனம் தளராதிருப்போமாக” (கலா6:9)***

*எட்டாம் நிலை :*

*எருசலேம் மகளிர் இயேசுவின் பாடுகளைப் பார்த்து கண்ணீர் வடிக்கின்றனர். இயேசுவின் இந்த நிலையை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை . எனவே கதறுகிறார்கள். ஆனால் இயேசுவோ - அவாகளுக்கு ஆறுதலும் அறிவுரையும் கூறுகிறார். நடந்துவிட்ட காரியத்துக்காக அழாதீர்கள். அதன் காரணங்களுக்காக அழுங்கள். கண்ணீர்விட்டு கதறக்கூடிய நிலைமைகளும் சூழல்களும் நம் இல்லங்களிலும் நிகழக்கூடும். அப்போது நிலைகுலைந்து போய் நிற்பதைவிட இவை நிகழாமல் இருக்க என்னென்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் வேண்டும்.*

*வீட்டின் ஒரே ஒரு சம்பாதிக்கும் நபரான தந்தையின் வேலை பறிபோகிற போது கண்ணீர் முட்டிக்கொண்டுதான் வரும். ஆனால் வேலை பறிபோனது என்பது விளைவு. அதற்காக அழுவதைவிட அதற்குக் காரணமான ஒழுங்கின்மை, கையூட்டு பெற்றமை, இவற்றிற்காக அழவேண்டும். இந்தக் காரியங்களைச் செய்ய கணவனைத் தூண்டிய மனைவி அதற்காக அழவேண்டும்.*

*குடும்பத்தலைவியான தாய்க்கு கடும் நோய் ஏற்படுகிறபோது அழுவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்? ஆனால் அளவுக்கு மீறிய வேலைப்பளுவை அவள் மீது சுமத்தியதற்காக அழவேண்டும். அல்லது தாயே கூட சரியான நேரங்களில் சத்தான உணவுகளைச் சாப்பிடாத கவனக் குறைவுக்காய், அசட்டைத்தனத்துக்காய் அழவேண்டும். தீய பழக்கங்களினால் நோயை வருவித்துக்கொண்ட இளைஞன் அதற்காய் அழவேண்டும்.*

*- இறுதித் தேர்வில் தோல்வி, பல ஆண்டுகளாக வேலை கிடைக்காமை இவையெல்லாம் அவமானத்தையும் அழுகையையும் வரவைப்பவைதான். ஆனால் இவற்றிற்குக் காரணம் விதி என்று கூறி வீணாய் இருப்பது மடமை. சோம்பேறித்தனமும், முயற்சியின்மையும்,*

*மை தவறியமையும் இவற்றிற்கு காரணமாக இருக்கக்கூடும். அப்போது வியர்வை சிந்தத் தவறியதால் இப்போது கண்ணீர் சிந்த வேண்டியுள்ளது.*

*கண்ணீர் வருவிக்கும் அளவுக்கு துன்பங்கள் நம் வாழ்வில், நிகழ்வதுண்டு. சில துன்பங்கள் நம் கைக்கு அப்பாற்பட்டவை. அவை கடவுளின் செயல்கள். அவற்றிற்காக அழுதுவிட்டு ஆண்டவரிடம் அர்ப்பணித்து விடுவோம். ஆனால் சில துன்பங்கள் நாமே வருவித்துக் கொண்டவை. விளைவுகளான துன்பங்களுக்காக அழுவதை நிறுத்திவிட்டு அதன் காரணங்களுக்காக அழுவோம். அவை இனிமேலாவது நிகழாமல் பார்த்துக் கொள்வோம்.*

***செபம் :*** *ஆண்டவரே! எங்கள் குடும்பத்தில் நிகழும் அதிர்ச்சி தரும் துக்க நிகழ்வுகள், எங்கள் கண்களை நனைத்தாலும் அவற்றிலிருந்து பாடங்கள் கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் துன்பங்கள் நிகழாத வண்ணம் வாழ்க்கையை நெறிப்படுத்த அருள்தாரும். ஆமென்.*

# கடவுள் கட்டினாலன்றி குடும்பம் சிறக்காது

***"மனிதரால் இயலாதவற்றைக் கடவுளால் செய்ய இயலும்" (லூக் 18:27)***

*ஒன்பதாம் நிலை:*

*இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார். சிலுவையைச் சுமக்க அவரால் முடியாமல் தடுமாறுகிறார். சீமோனின் உதவி, வெரோணிக்களின் ஆதரவு, எருசலேம் பெண்களின் ஆறுதல் இவையெல்லாம் சற்று மனபலத்தைத் தந்தாலும் மனித உதவிகள் அவருக்கு போதிய பலம் தரவில்லை . தரையில் விழுகிறார். விழுந்த அவர் முகத்தை உயர்த்திப் பார்க்கிறார். கல்வாரியின் முகட்டைப் பார்க்கிறார். அதையும் தாண்டி விண்ணைப் பார்க்கிறார். தந்தையைப் பார்க்கிறார். சக்தி பிறக்கிறது. பயணத்தைத் தொடர்கிறார். மனிதரின் பலம் எல்லாம் தோற்றுப்போகிறது. நம் குடும்பங்களில் இத்தகைய தருணங்கள் வந்துள்ளன அல்லவா?*

*எத்தனை முயற்சிகள்? எத்தனை அலைச்சல்கள்? எத்தனை ஆலோசனைகள்? அத்தனைக்குப் பிறகும் தோல்விகள், தடுமாற்றங்கள், வீழ்ச்சிகள். குடும்பத் தலைவன் நான். எனக்குத் தெரியும் என்ன செய்ய வேண்டுமென்று. நான் சொல்வதைச் செய்யுங்கள்' என மார்தட்டிய தந்தை தடுமாறிப் போகிறார்.*

*'நான் தான் வீட்டிலேயே இருப்பவள். எனக்குத்தான் வீட்டுச் சூழல் தெரியும். இந்த பிரச்சனைக்கு இது தான் தீர்வு' என்று தீர்க்கமாய் சொன்ன தாயும் தவறிவிடுகிறாள்.*

*'உங்களுக்கெல்லாம் இந்தக் காலம் தெரியாது. நீங்கள் பழைய காலத்து ஆட்கள். எங்களிடம் துடிப்பு உண்டு, ஆற்றல் உண்டு, பாருங்கள் ஜெயித்துக் காட்டுகிறோம்' என்று வீரம் பேசிய பிள்ளைகளும் தோற்றுப் போகிறார்கள்.*

*நமது அறிவு, அனுபவம், பலம் என நம்மையே நம்பி இறுதியில் தடுமாறி விழுகிற நாம் உண்மை பலமான இறைவனின் துணையை நாடுவதே இல்லை. ஆலோசனை பெற அனுபவமிக்கவர்களையெல்லாம், வலைவீசித்தேடி, பணம் செலவு செய்து பார்க்கும் நாம், இறைவனின் ஆலோசனை பெற முயற்சி எடுப்பதே இல்லை. எனக்கு உதவி ஆண்டவரிடமிருந்தே வரும்' என்ற சங்கீத ஆசிரியரின் நம்பிக்கையோடு ஆண்டவரின் உதவியை நாம் எப்போது தேடப்போகிறோம்? நமது பலத்தையும் மனித பலத்தையும் மட்டுமே நாம் நம்பியிருக்கும் வரை மீண்டும் மீண்டும் விழத்தான் விழுவோம். நம் பலமின்மையும் இறைவனின் பலமும் இணைகின்ற போது, நமது வலுவின்மையும் வலிமையாய் மாறும். இந்த வலிமையைப் பெற குடும்பமாக ஜெபிக்கிறோமா? அதைச் செய்யும் வரை நாம் விழுவது தொடரத்தான் போகிறது.*

***செபம் :*** *ஆண்டவரே! என் ஆற்றலாய் உள்ளவரே! நீரே எங்கள் அரண் என அறிக்கையிட்டு, உம் உதவியோடு எங்கள் உழைப்பை சேர்த்து வெற்றிகாணும் அருளைத்தாரும். ஆமென்.*

# மாண்பு பேணப்படாத போது மனது கனக்கிறது.

*"சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்" (எபே 4:26)*

*பத்தாம் நிலை:*

*இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள். அவமானத்திற்கு உள்ளாக்குகிறார்கள். அந்தரங்கம் இங்கே பகிரங்கமாக்கப்படுகிறது உடலை வருத்தியவர்கள் இப்போது உணர்வையும் வருத்துகிறார்கள். மனித மாண்பு மறுக்கப்பட்ட நிலையில் மனுமகன் உள்ளார். நம் குடும்பங்களிலும் சில நேரங்களில் மனித மாண்பு மீறப்படுகிறதே.*

*என்றோ ஒரு நாள் உணவில் உப்பு குறைந்து விட்டாலோ, சுவை குறைந்து விட்டாலோ என்ன நடக்கிறது? 'சாப்பாடா இது? சமையலா பண்ணியிருக்கே?' என்று தட்டை வீசி எறிவதும் பாத்திரங்களை வீசி எறிவதும் என்ன நாகரீகம்? ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்ற அடிப்படை உண்மையையே மறந்து கையோங்குவதும், மனைவியைத் தாக்குவதும் ஆண்மைக்கு அழகா என்ன? இத்தகு நேரங்களில் தன் மாண்பையே இழந்து அவமானப்பட்டுப் போகிறது பெண்மை.*

*'கணவன்' என்ற நிலையைக்கூட பொருட்படுத்தாமல் ஒருமையில் பேசுவதும் எடுத்தெறிந்து பேசுவதும் அசட்டை செய்வதும் பெண்மைக்கு அழகல்லவே! இவையெல்லாம் நிகழும் போது ஆண்மையும் சிறுத்துப் போகிறது.*

*குழந்தைகள் வயதில் சிறியவர்கள் தான் என்றாலும் நம் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்கள்தான் என்றாலும் அவர்களுக்கும் மாண்பு உண்டு. அவர்களைக் கண்டித்து வளர்க்கிறோம் என்ற பெயரில் கண்மூடித்தனமாய் அடிப்பதும், கண்டபடி பேசுவதும், அவர்களது நண்பர்கள் முன்பாக மோசமாக நடத்துவதும் அவர்கள் மாண்புக்கு நாம் மரியாதை தராததையே காட்டுகிறது. அவ்வாறே குழந்தைகளும் மற்றவர்கள் பார்க்கின்ற போது பெற்றோரை அவமரியாதையாய்ப் பேசுவதும் நடத்துவதும் அழகில்லையே!*

*இப்படி குடும்பத்தில் ஒருவர் ஒருவரது மாண்பை மதித்துப் போற்றுவதற்குப் பதிலாக மாண்பைக் குறைத்து அவமானப்படுத்துகிறோம். போற்றுவதாய் இருந்தால் பலர் முன்னிலையிலும் திருத்துவதாய் இருந்தால் தனிமையிலும் திருத்த வேண்டும் என்பது தான் நியதி. இதனை மறந்து பிறர் முன்பாக நம் குடும்பத்தாரை இழிவு படுத்தும் போது, அந்தரங்கத்தில் நிகழ வேண்டிய பரிமாற்றங்கள் பகிரங்கமாக பரிவர்த்தனம் செய்யப்படுகிறபோது, இயேசுவுக்கு நிகழ்ந்த அவமானம் நம் இல்லங்களிலும் தொடர்கிறது.*

***செபம் :*** *ஆண்டவரே! எங்கள் குடும்பத்தாரை பாராட்டுவதாய் இருந்தால் பிறர் முன்னிலையிலும், குறைகூறுவதாய் இருந்தால் தனிமையிலும் செய்து, அவர்கள் மாண்பை மதிக்கக் கற்றுத் தாரும். ஆமென்.*

# கனிவு இருக்குமிடத்தில் கட்டுப்பாடும் கசக்காது

*"ஒருவருக்கொருவர் அன்பின் அடிமைகளாய் இருங்கள்"(கலா 5: 13)*

*பதினோறாம் நிலை :*

*தான் சுமந்து வந்த சிலுவையின் மீது இயேசுவை கிடத்தி கூரிய ஆணிகளால் அறைகிறார்கள். இயேசு விரும்பியிருந்தால் ஒரே நொடிப்பொழுதில் உதறித்தள்ளிவிட்டு வீறு கொண்டெழுந்து தன் வல்லமையைக் காட்டியிருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. காரணம் இப்போது தன் சுதந்திரத்தை இந்தச் சிலுவையில் சக்தியிழக்கச் செய்வதால் எல்லோருக்கும் நிறைவான சுதந்திரமும், மீட்பும், மகிழ்வும் தரமுடியும் என்பதை உணர்ந்தார். எனவே கட்டுண்டவரானார். நமது குடும்பங்களிலும் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்க முடியாத நிலை ஏற்படுவதுண்டு.*

*'நான் ஒரு ஆண்மகன். எனக்கென்ன கட்டுப்பாடு? நான் எங்கு வேண்டுமானலும் போவேன், எப்போது வேண்டுமானாலும் வருவேன் என்கின்ற நிலை, திருமணமாகி குடும்பமாக ஆன பின்னால் மாறிவிடுகிறது. நமக்காக மனைவி, குழந்தைகள் என சில நேச உள்ளங்கள் காத்திருக்கும் என்ற உணர்வு நம் சுதந்திரத்திற்கும் கட்டுப்பாடு விதிக்கிறது. ஆரம்பத்தில் கசந்தாலும் பின்னர் இந்தக் கட்டுப்பாடு இனிமையாகிவிடுகிறது.*

*பிறந்த வீட்டில் இஷ்டம் போல் சுதந்திரமாய் சுற்றி வந்த பெண் புகுந்த வீடு என்னும் இன்னொரு இடத்தை அடைகிறபோது இயற்கையான சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றை முட்களாகவும் ஆணிகளாகவும் பார்ப்பதைவிட நம்மை புதிய இடத்தில் ஒன்றவைக்கும், ஒட்டவைக்கும் சாதனங்களாகப் பார்க்க பழகிக்கொள்ள வேண்டும்.*

*இந்த வயதில் அனுபவிக்கவில்லையென்றால் எப்போது அனுபவிப்பது?' என்ற கேள்வியுடன் விருப்பம் போல் சுற்றித் திரிந்து எங்கு வேண்டுமானாலும் போகவும், எப்போது வேண்டுமானாலும் வரவும் ஆசைப்படுகிற பிள்ளைகளுக்கு எங்கே போயிருந்தாய் ? ஏன் இவ்வளவு நேரம்?' என்ற பெற்றோரின் கேள்விகள் தங்கள் சுதந்திரத்தை பறிக்கும் விலங்குகளாகத் தோன்றும். ஆனால் பெற்றோரின் அந்தக் கேள்விகள் அதிகாரத்தின் வெளிப்பாடல்ல. மாறாக அக்கறையின் வெளிப்பாடுகள், அன்பின் வெளிப்பாடுகள்.*

*தங்கள் சுதந்திரம் பறிபோகிறது என குடும்பத்தில் உள்ளவர்கள் நினைக்கிற போது எரிச்சலும் கோபமும் தோன்றும். ஆனால் தாமாகவே முன்வந்து சுதந்திரத்திற்கு ஓய்வு தந்து பிறரை அனுசரித்து நடக்கும் போது அது சுகமாக மாறுகிறது. நம் சுதந்திரம் பறிபோவதாய் எண்ணாமல் பயன்படுவதாய் உணர்வோம்.*

***செபம் :*** *ஆண்டவரே! சுதந்திரத்தைத் தந்துள்ள நீர் அதை நல்லமுறையில் பயன்படுத்த சுயதெளிவையும் தந்துள்ளீர். நாங்கள் குடும்ப நலனுக்காக சில கட்டுப்பாடுகளை மனமுவந்து ஏற்றுக்கொள்ள கற்றுத்தாரும். ஆமென். கும்ப தீபம் சுடர்விட தியாகத் திரி எரியவேண்டும்*

# குடும்ப தீபம் சுடர்விட தியாகத் திரி எரியவேண்டும்

***'தம்மையே வெறுமையாக்கிய கிறிஸ்துவின்மனநிலை நிலவுக' (பிலி 2:5)***

*பன்னிரெண்டாம் நிலை :*

*தனது பணியை முடித்துவிட்ட நிறைவில் இயேசு சிலுவையில் உயிர் துறக்கிறார். முக்காலத்திற்கும் உரியவரும் முதலும் முடிவும் ஆனவருமான இயேசு தன் மண்ணுலக வாழ்வுக்கு முடிவு தருகிறார், தன் உயிரைத் துறப்பதன் மூலம். அவர் உயிரை யாரும் எடுக்கவில்லை . அவரே மனமுவந்து கையளிக்கிறார். அவர் உயிர் பறிக்கப்படவில்லை. அவரால் பரிசளிக்கப்படுகிறது. 'பெறுதலைக் காட்டிலும் தருதலில் தான் இன்பம் அதிகம்' என்பதை உணர்த்தும் தியாகத் திருமகனாய் இயேசு உயர்ந்து நிற்கிறார். குடும்பவாழ்வில் தியாகம் இன்றியமையாத ஒன்று.*

*தந்தை தன் விருப்பப்படி வாழவோ, செலவு செய்யவே முடிவதில்லை. தன் பழக்கங்களை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. தன் செலவுகளையும் அதனால் தன் சுற்றத்தையும் சுருக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அயராத உழைப்பு அவசியமாகிறது. சில நேரங்களில் இரவிலும் கண்விழித்து உழைக்க வேண்டியுள்ளது. இவையெல்லாம் குடும்ப வாழ்வு அவரிடம் எதிர்பார்க்கும் தியாகங்கள். ஆனால் உடல் வருந்தினாலும் இந்தத் தியாக வாழ்வு மனதை நிறைவாக்குகிறது.*

*ஒரு தாயின் தியாகத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. பத்து மாதம் சுமப்பது முதல், தன் உதிரத்தையே பாலாக ஊட்டி, உண்பித்து வளர்த்து, கண்ணயராது காத்து, இறுதிவரை அன்பு செய்யும் தாயின் வாழ்வு முற்றிலுமாக ஒரு தியாக வாழ்வுதான். இந்தத் தியாக வாழ்வு அவளுக்குக் கசப்பதில்லை . மாறாக இனிக்கிறது.*

*பிள்ளைகளும் தியாகம் செய்ய முடியும். செய்கின்றனர். தாங்கள் விரும்புவதையெல்லாம் பெற ஆசையிருந்தாலும் குடும்பச் சூழலை அறிந்து, வேண்டாம் எனச் சொல்லும்போது மனம் சங்கடப்படும் ஆனால் அதில் ஒரு சந்தோஷம் உண்டு. மேலும் படிக்கத் திறமையும் ஆசையும் இருந்தாலும் சகோதர சகோதரிகளின் நலனுக்காக வேலைக்கு சென்று அவர்களைப் படிக்கவைக்கும்போது சுமையாகத்தான் இருக்கும் ஆனால் அவர்கள் முன்னேற்றத்தைப் பார்க்கும்போது அவை சுகமான சுமைகளாக மாறிவிடும்.*

*எந்தக் குடும்பத்தையும் தாங்குவது அன்பும் தியாகமும் தான் தியாகம் செய்யத் தயங்கினால் குடும்பம் களையிழந்து போய்விடும். நம் விருப்பம் நிறைவேறி நாம் உதிர்க்கும் புன்னகையைக் காட்டிலும் நம் தியாகத்தால் பிறர் சிரிப்பதைப் பார்க்கும் போது கிடைக்கும் மகிழ்ச்சி அளவிடமுடியாதது. சில தியாகங்கள் அவசியமாகிறபோது தயங்காமல் சலித்துக் கொள்ளாமல் செய்ய கற்றுக்கொள்வோம். அப்படி தியாகம் செய்ய தயங்கும் பட்சத்தில் குடும்பத்தின் மகிழ்ச்சியையே தியாகம் செய்ய நேரிடும்.*

*செபம் : ஆண்டவரே! எங்களுக்காக உம் இன்னுயிரையே தியாகம் செய்த உம்மைப் பின்பற்றி, எங்கள் குடும்பத்திற்காக சிறு சிறு தியாகங்கள் செய்யும் தியாக உள்ளத்தைத் தாரும். ஆமென்.*

# ஆரவாரமற்ற குடும்பம் அமைதியில் நிலைபெறும்

*'அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள்' (எபே 4:29)*

*பதின்மூன்றாம் நிலை :*

*மரித்த இயேசுவின் திருவுடலை அன்னை மரியாளின் மடியில் கிடத்துகிறார்கள். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பாலகனாக இதே மகனை மடியில் ஏந்தினார்கள். மன்னர்கள் முதலானோர் பணிந்து வணங்கினர். அப்போது இந்த அன்னை உள்ளத்தில் மகிழ்ந்தார்கள். ஆண்டவரில் அக்களித்தார்கள். ஆனால் ஆர்ப்பாட்டம் பண்ணவில்லை. இன்றும் இறந்து போன அதே மகனின் திருவுடலை தன் மடியில் ஏந்தும் போது மனதுக்குள் அழுதார்கள். ஆனால் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. இன்பத்தையும் துன்பத்தையும் அமைந்த மனதோடு ஏற்றுக்கொண்டார்கள். நம் குடும்பத்தில் நிகழும் இன்ப துன்பங்களில் நாம் எப்படி நடந்துகொள்கிறோம்?*

*வசதி இருக்கும்போது வாரியிறைப்பதும், வசதி குறையும்போது வாடி இருப்பதும் எதற்காக? மகிழ்ச்சியான நேரங்களில் ஊரையே கூட்டி கும்மாளம் போடுவதும், துன்பம் வந்தவுடன் துவண்டு போவது தற்காக? எல்லாம் நன்றாக நடக்கும்போது குடும்பத்தாரை மனம் போன போக்கில் வாழவிட்டு விட்டு, பின்னர் நிலைமைகள் மாறும் போது எதற்கெடுத்தாலும் எரிந்துவிழுவது எதற்காக? இன்பம், துன்பம், வாழ்வு, தாழ்வு, வெற்றி, தோல்வி எது நிகழ்ந்தாலும் சமநிலையோடு இருக்கத் தெரிந்தவன்தான் சிறந்த குடும்பத்தலைவன்.*

*தங்கள் விருப்பப்படி எல்லாம் நடக்கும் போது "என் வீட்டுக்காரர் போல உண்டா? என் பிள்ளைகளைப் போல உண்டா?" எனப் பற்றிக்கொள்ளும் குடும்பத் தலைவிகள், சரிவு ஏற்படும்போது உள்ளம் உடைந்து போகிறார்கள். இன்பத்தின் போது அதிக உணர்ச்சி வசப்படுவதும், துன்பத்தின் போது இடிந்து போய்விடுவதும் பல தாய்மார்களின் இயல்பாக உள்ளது.*

*வெற்றி கிடைக்கும்போது தேவையில்லாமல் பெருமையடித்து கொள்வதும், தோல்வியடைந்தால் ஓடி ஒளிந்து கொள்வதும் பல குழந்தைகளின் பழக்கமாக உள்ளது. வாலிப நாட்களின் கூத்தும் கொண்டாட்டமும், அவற்றோடு வரும் உல்லாசமும் சிற்றின்பமும், பிறகு நோயிலும், துன்பத்திலும், தோல்வியிலும் முடிகிறபோது தற்கொலை முடிவைத் தேடும் அளவிற்கு வாலிபர்கள் செல்வதுண்டு.*

*இவ்வுலக வாழ்க்கையில் எதுவும் நிரந்தரமல்ல. இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவதுதான் உலக இயல்பு. இன்ப நாட்களில் எல்லைக்கடங்கா எழுச்சியும், துன்ப வேளையில் சொல்லிலடங்கத் துயரமும் அடைவது நமக்கும் நம் குடும்பத்துக்கும் நல்லதல்ல. எது நடந்தாலும் மரியாளைப்போல அமைந்த உள்ளத்துடனும் அமைதியான மனநிலையோடும் வாழக் கற்றுக்கொண்டால் மகிழ்ச்சி கண்ணை மறைக்காது. துன்பமும் தொண்டையை அடைக்காது.*

***செபம் :** ஆண்டவரே! இன்ப வேளையில் உமக்கு நன்றி செலுத்தவும், துன்ப வேளையில் உம் துணையை நாடவும் அனைத்தையும் மரியாளைப்போல அமைந்த உள்ளத்துடன் ஏற்றுக்கொள்ளவும் அருள்தாரும். ஆமென்.*

# அமைதி அனுமதிக்கப்பட்டால் அழிவு தவிர்க்கப்படும்

*" அமைதிக்கு வழிவகுப்பவற்றை நாடுவோமாக" (உரோ 14:1)*

*பதினான்காம் நிலை :*

*இயேசுவின் மரித்த உடலை இரவல் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள். எங்கும் நிறைந்த இறைவனை, எல்லைகாணா கடவுளை ஒரு இருண்ட குகைக்குள் அடக்கப் பார்க்கிறார்கள். அவரும் அதை அனுமதிக்கிறார். இது இருள் ஆட்சி செலுத்தும் நேரம். எனவே ஒரு அமைதி காக்கிறது. நிகழ்வது தவறு என்றாலும் கூட அது அனுமதிக்கப் படுகிறது. சரியான நேரம் வரும் வரை சத்திய காத்திருக்கிறது. அமைதி காக்க வேண்டிய, அடங்கிப்போக வேண்டிய சில தருணங்கள் நம் குடும்பங்களிலும் ஏற்படுவது உண்டு.*

*உண்மை என்னவென்று தெரியாமல், எடுத்த எடுப்பிலேயே குடும்பத்தலைவர் கூச்சலிடலாம். அவரது ஆத்திரத்திற்கு அர்த்தமே இல்லாமல் இருக்கலாம். அவரது நிலை முற்றிலும் தவறானதாகவும் நமது நிலை முற்றிலும் சரியானதாகவும் இருக்கலாம். ஆனால் அவர் ஆத்திரத்தில் இருக்கும் போது அவருக்கு ஈடாக நின்று நமது நிலைதான் சரி என நிரூபிக்க முற்படுவது புத்திசாலித்தனம் அல்ல. அதனால் வாக்குவாதம் அதிகரிக்கும். சண்டை நீளும். கோபம் கூடும். இறுதியில் குழப்பம் மட்டுமே மிஞ்சும். அமைதி காத்து விட்டு ஆத்திரம் - அடங்கியதும் புரியவைப்பதுதான் அமைதியைத் தரும். தெளிவையும் தரும்.*

*அதுபோலவே, நடந்தது என்ன என்பதைச் சரியாக புரிந்து கொள்ளாமலேயே, சந்தேகக் கனல் தெறிக்க குடும்பத் தலைவி குமுறுகிற போது கணவன் அமைதி காப்பதே நலம். அந்த நேரத்தில் எது பேசினாலும் தவறாகத்தான் தோன்றும். தவறாகத்தான் புரிந்து கொள்ளப் படும். இயல்பான நிலை திரும்பிய பிறகு தரப்படும் விளக்கங்கள் தான் விரும்பிய பலனை ஏற்படுத்தும்.*

*பெற்றோர்கள் சொல்வதில் கொஞ்சமும் நியாயமோ, உண்மையோ இல்லை என்ற நிலை இருந்தாலும் கீழ்ப்படிந்து அடங்கிப் போய்விட்டு, பின்னர் குழந்தைகள் தங்கள் நிலையை எடுத்துக்கூறினால், பெற்றோர் ஆத்திரப்பட்டதற்காக வருத்தப்பட்டு இன்னும் ஆவலாக குழந்தைகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்கள்.*

*இப்படி நம் சொந்தக் குடும்பமே என்றாலும் கூட சில நேரங்களில் அனுசரித்து போகவேண்டிய நிர்ப்பந்தமும், அமைதிகாக்க வேண்டிய அவசியமும், அடங்கிப்போக வேண்டிய சூழலும் ஏற்படும். அப்போது அதை அனுமதித்துவிட்டு பின்னர் சமயம் வாய்க்கையில் பிரச்சனையை தீர்ப்பது தான் உகந்த வழி. சத்தியத்தை நித்தியமாக அடக்கிவைக்க முடியாது. உயிர்த்த இயேசுவைப்போல் அவை வெளிச்சத்துக்கு வரும். அதுவரை அமைதி காப்பதில் தவறில்லையே!*

***செபம் :*** *ஆண்டவரே! கோபமும், ஆத்திரமும் கொழுந்துவிடும் நேரத்தில் அமைதி காக்கவும், இயல்புநிலை திரும்பும் வரை காத்திருக்கவும் எங்களுக்கு பொறுமையை கற்றுத்தாரும். ஆமென்.*